செ.வெ.எண் : 30/ஏப்ரல் நாள் : 24.04.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி, அந்தந்த சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் இன்று (24.04.2016) நடைபெற்றது. மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஒவ்வொரு சட்டமன்ற பகுதிக்கும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு, வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தினை கையாளும் முறைகள் குறித்து விளக்கினார்.

முதலாவதாக, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் இராமநாதபுரம், செய்யதம்மாள் மேல்நிலைப்பள்ளியில், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியில் தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சியினை துவக்கி வைத்தார். அதன்பின்பு, பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பரமக்குடி கீழமுஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முதுகுளத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் திருவாடணை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பி.கே.மங்கலம், செயின்ட் பிரான்சிஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் நடைபெற்ற அந்தந்த சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்ச்சியினை நேரில் சென்று பார்வையிட்டு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தினை கையாளும் முறைகள் குறித்து விளக்கினார்.

தொடர்ந்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

சட்டமன்ற பொதுத்தேர்தல்-2016 வாக்குப்பதிவு நாள் நெருங்குவதைத் தொடர்ந்து, இராமநாதபுரம் மாவட்டத்தில் வாக்குப்பதிவிற்கு தேவையான அனைத்து முன்னேற்பாடு பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி இன்று நடைபெறுகிறது. பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் 28 மண்டல அலுவலர்கள், 644 வாக்குச்சாவடி அலுவலர்களும், திருவாடனை சட்டமன்ற தொகுதியில் 30 மண்டல அலுவலர்கள், 1280 வாக்குச்சாவடி அலுவலர்களும், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியில் 57 மண்டல அலுவலர்கள், 1137 வாக்குச்சாவடி அலுவலர்களும், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதியில் 35 மண்டல அலுவலர்கள்,1891 வாக்குச்சாவடி அலுவலர்களும் தேர்தல் பணியில் ஈடுபடுகின்றனர். தேர்தல் பணியில் ஈடுபடும் மண்டல அலுவலர்களுக்கு முன்னதாக மூன்று கட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. தேர்தல் பயிற்சி பெற்ற மண்டல அலுவலர்கள் மூலமாக தற்போது வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு முதற்கட்ட பயிற்சி வழங்கப்படுகிறது.

இப்பயிற்சியில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தினை கையாளும் முறை, தேர்தல் படிவங்களை பூர்த்தி செய்யும் முறை உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகிறது. வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான இந்த முதற்கட்ட பயிற்சியோடு மொத்தம் நான்கு கட்டமாக பயிற்சிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சிகளை வாக்குச்சாவடி அலுவலர்கள் முழுவதுமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அலிஅக்பர், சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்கள் சார் ஆட்சியர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., (பரமக்குடி), வருவாய் கோட்டாட்சியர் திரு.ராம்பிரதீபன் (இராமநாதபுரம்), மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ராஜசேகரன் (திருவாடானை), மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.ராமையா (முதுகுளத்தூர்) உட்பட தேர்தல் பணியில் ஈடுபடும் மண்டல அலுவலர்கள், வாக்குச்சாவடி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**